Tiaano®
Innovation In Inert Metals

**Ti Anode Fabricators Pvt. Ltd.**

#48 Noothancharv. Madambakkam. Chennai – 126. India. Ph: 0091 44 2278 1148 Fax: 22781362 Email: info@tianode.com web: www.tianode.com

**"கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா"**

## GOAL 2013-2014

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 240% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Feb. 14 : 747 Nos.
  - Up to Jan. 14 : 741 Nos.
- **Performance Feb. 14 …**
  - Turnover growth : 3.09 %
  - Employment growth : 1.92 %
  - 100% Attendance : 24.35%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. Velappan Jeyakummar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika Jeyakummar

## OUR FORMULATIONS

Tiaano – Electro Chemical & Exotic Metal Equipments

Aquafil – Water Disinfection Equipments.

Fib Tec Composite – FRP/ GRP Mandrels & Tanks

HydroGen – HHO Generators

Titanictrade – Portal for Exotic Metals

– Tiaano Vidyashrm (CBSE Pattern School)




## பரிவு

ஒரு மைதானத்தில் இரண்டு குதிரைகள் மேய்ந்து கொண்டிருந்தன. அவற்றை துாரத்தில் இருந்து பார்த்தால், ஒன்றுபோலத் தெரிந்தன. அருகில் வந்து பார்த்தால் குறிப்பிடத்தக்க வித்தியாசத்தை அறிந்து கொள்ள முடிந்தது. அதாவது, ஒரு குதிரையின் அருகில் யாராவது சென்றால் அது ஏறிட்டுப் பார்க்கும். அதன் கழுத்துவாரில் ஒரு மணி கட்டப்பட்டிருந்தது.

இன்னொரு குதிரை அருகே செல்பவரைக் கண்டு கொள்ளாது. ஏனெனில், அதற்கு பார்வை இல்லை. ஆனால், தன் அருகிலுள்ள குதிரையின் மணிச்சத்தத்தை உன்னிப்பாக கவனித்து அது செல்லுமிடத்துக்கு இதுவும் போய்விடும். பார்வையற்ற குதிரை என்றாலும் அதன் உரிமையாளர் அந்தக் குதிரையை அன்போடு பராமரித்து வந்தார்.

ஒரு நாள் மேய்ச்சல் முடிந்து மணி கட்டிய குதிரை புறப்பட்டது. தன் நண்பனான குதிரை பின்னால் வருகிறதா என அது அடிக்கடி திரும்பிப் பார்த்துக் கொண்டது. பார்வையற்ற குதிரையும் மணிச் சத்தத்தை உணர்ந்து பின்னாலேயே சென்றது. "தன் நண்பன் தன்னை தவறான வழியில் வழி நடத்தமாட்டான்" என்பது அதன் தீர்க்கமான நம்பிக்கை சில சமயங்களில் பார்வையற்ற குதிரை பின்தங்கிவிட்டால், முன்னால் சென்ற குதிரை நின்று அதனை அழைத்துச் செல்லும். இதைப் பார்த்தவர்கள் ஆச்சரியப்பட்டனர். இந்த குதிரைகளுக்குள் இவ்வளவு ஒற்றுமையா என்று!

இந்த குதிரைகளின் எஜமானரை போலவே, அன்புள்ள நமது இறைவனும் நாம் குறைவுள்ளவர்களாகவும், பிரச்சனைக்குரியவர்களாகவும், பயனற்ற—வர்களாகவும், பாரமுள்ளவர்களாகவும் இருந்தபோதும், நிராகரிக்காமல் இருக்கிறார். நம்மைப் பரிவுடன் கண்காணிக்கிறார். மணி கட்டிய குதிரை வழிகாட்டியது போல, நம்முடைய தேவைகளுக்கு ஏற்ப மனிதர்கள் மூலம் தயவு கிடைக்கச் செய்கிறார். சில வேளைகளில் பார்வையற்ற குதிரை மெல்லிய மணியோசையையும் கூர்ந்து கவனித்து பின் செல்வது போன்று, ஒற்றுமையுள்ள இந்த குதிரைகளைப் போல நாமும் "ஒருவர் பாரத்தை ஒருவர் சுமந்து ஒருவர் குறைகளை ஒருவர் மன்னித்து இறைவன் காட்டுகின்ற நல் வழியில் நடப்போமாக!

Compiled By : Ms. P.E. Nancy
Director – Admin

## Lesson in Life

A wise man sat in the audience and cracked a joke. Everybody laughs like crazy. After a moment, he cracked the same joke again. This time, less people laughed. He cracked the same joke again and again. When there is no laughter in the crowd,

### He Smiled and Said :

You can't laugh at the same joke again and again, but why do you keep crying over the same thing over and over again?.

Compiled By : Mrs. K. Shreemadhi
Administration

## FUNCTIONAL WISHES

**TAMIL NEW YEAR - 14th APRIL**
**EASTER SUNDAY - 20th APRIL**

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel:22294565 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



| | |
|---|---|
| **Mr. Samuel. S. Sekhar** Marketing | **01st Apr.** |
| **Mr. G. Manivannan** Coating | **01st Apr.** |
| **Mr. G. S. Mohana Kumar** Production | **01st Apr.** |
| **Mr. C. Abilash** Marketing | **03rd Apr.** |
| **Mr. T. Raveendran** Marketing | **04th Apr.** |
| **Miss. T. Regi** Facilitation | **04th Apr.** |
| **Mr. M. Pullan** Production | **07th Apr.** |
| **Mr. A. Neduchizhian** Production | **07th Apr.** |
| **Mr. T. Ramesh** Marketing | **08th Apr.** |
| **Mr. K. Murugan** Production | **08th Apr.** |
| **Mr. T. Stephen Prabakar** Finance | **09th Apr.** |
| **Mr. S. Kannan** Production | **10th Apr.** |
| **Mr. P. Balasubramanian** Production | **11th Apr.** |
| **Mr. C. Subash** Production | **13th Apr.** |
| **Mrs. A. Nirmala** Finance | **22nd Apr.** |
| **Mr. N. Shanmugam** Project | **30th Apr.** |

**Best Wishes from Tiaano Employees**

## கான்ஃபிடன்ஸ் கார்னர்

குளத்தில் குளித்த சிறுவனின் கால்களை முதலை கவ்வியது. அலறிய மகனின் குரல் கேட்டு அவனுடைய தாய் அவன் கைகளைப் பற்றி இழுத்தாள். இந்தப் போராட்டத்தில் முதலையின் பிடியில் கால்கள் காயமாக, தாய் இழுத்ததில் கைகளில் காயம் ஏற்பட்டன. ஒருவர் ஓடிவந்து முதலையைத் துப்பாக்கியால் சுட்டு சிறுவனை மீட்டார். அவன் கால்களில் ஒன்று அகற்றப்பட வேண்டி வந்தது.

சிறுவன் சிரித்தபடி சொன்னான். "கால் இழந்தது பற்றிக் கவலையில்லை. என் தாய் இழுத்ததில், என் கைகளில் ஏற்பட்ட காயம், கடவுளுக்கு என் மேல் இருக்கிற அக்கறைக்கு அடையாளம். அந்தக் காயத்தின் தழும்பு, கடவுள் இருப்பதைக் காலமெல்லாம் நினைவுபடுத்தும்" என்றான்.
கருணை சில நேரம் காயமாகக் கூட வெளிப்படலாம்.

–கான்பிடன்ஸ் கார்னர் என்ற நூலிலிருந்து தொகுக்கப்பட்டது

## தனித்திரு

வகுப்பறையில் கணக்குப் பாடம் நடந்து கொண்டிருந்தது. ஆசிரியர் மாணவர்களுக்குக் கணக்குக்கான கேள்வி கொடுத்தார். "பத்து ஆடுகள் மேய்ந்து விட்டு வீடு திரும்பிக் கொண்டிருக்கின்றன. அதில் ஒன்று மட்டும் வழியில் உள்ள பள்ளத்தில் விழுந்து விட்டது. மீதம் எத்தனை ஆடுகள் வீடு திரும்பும்?" என்று கேட்டார். ஒரு மாணவன் எழுந்து "ஒன்பது" என்றான். சரியான விடை என்று ஆசிரியர் பாராட்டியதும், இன்னொருவன் எழுந்து "எதுவுமே வீடு திரும்பாது என்றான். கோபமாக ஆசிரியர் "உனக்கு கணக்குத் தெரியாதா?" என்றார்.

"இல்ல சார்... உங்களுக்குத் தான் ஆட்டைப் பத்தி தெரியாது" என்றான். உண்மை. ஒரு ஆடு பள்ளத்தில் விழுந்துவிட்டால், அதே பள்ளத்தில் எப்படியாவது விழுந்துவிட மற்றைய ஆடுகள் துடிக்கும்... அவை மந்தையாக மட்டுமே இயங்கும் இயல்புடையவை. அதாவது ஒவ்வொரு ஆடும் நான் நான் என்று தன்னைப் பிரித்தறியாது ஒரு கூட்டம் முழுவதுமே ஒரே நான் என்ற எண்ணத்துடன் செயல்படும்.

ஆரம்பத்தில் மனிதவர்க்கமும் அப்படித்தான் இருந்தது. ஒரு குடும்பம், ஒரு குழு, ஒரு கூட்டம், ஒரு குலம் என்று ஒரே தன்மையில் ஒரே உயிர் போல வாழ்ந்தது. நாளாக நாளாகத்தான் கூட்டமாக, கும்பலாகத் தங்களை ஒரே உணர்வுடன் நினைக்கும் நிலைமாறி தனித்தனியாகத் தங்களை அடையாளம் காணத் தொடங்கினார்கள். இதில் சில நன்மைகளும், தீமைகளும் உள்ளன. அறிவு வளர்ச்சிக்கும், ஆரோக்கியத்திற்கும் இதுவே காரணம், சுயநலம் பெருகியதற்கும் இதுவே காரணம்.

ஒரு கூட்டத்திற்கு மத்தியிலும் தனித்திருப்பது பல சந்தர்ப்பங்களில் மிக மிக அவசியம். அரிச்சந்திரன் நாடகம் நடந்தது. ஆயிரக்கணக்கானோர் கூட்டமாக உட்கார்ந்து அதனை ரசித்து மெய் மறந்து தங்களையே அந்த நாடகத்தில் இழந்து கொண்டிருந்தபோது, ஒரே ஒருவன் மட்டும் தன்னை இழக்காமல் முழுமையாகத் தன்னை மீட்டுக் கொண்டிருந்தான். ஆம்... நானும் ஏன் இந்த அரிச்சந்திரனைப் போல வாழக் கூடாது" என்று உறுதிப் பூண்டான். அத்தனை கூட்டத்திலும், கூட்டத்தோடு கூட்டமாகக் கரைந்து போகாது, தன்னைத் தன் தனிமையை மீட்டெடுத்ததால் தான் அந்தச் சிறுவன் பிற்காலத்தில் மனித குலத்திற்கு மத்தியில் ஒரு மகாத்மா காந்தியாகத் தனித் தன்மையுடன் உருவெடுக்க முடிந்தது.

கோடிக்கணக்கான மக்கள் சம்பந்தப்பட்டப் பிரச்சனைகளிலும் கூட ஒன்றிரண்டு நீதிபதிகள் அல்லது அதிகபட்சம் பத்து பதினைந்து நீதிபதிகள் தான் தீர்வு காண்பார்கள். கோடிக்கணக்கானவர்களின் பிரச்சனைகளை கோடிக்கணக்கான –

Contd...3

## தெரிந்து கொள்வோம்

Real meaning of the word " **TRUST** "



## இலைகளின் மருத்துவ குணங்கள்

வேப்பிலை :
குடல் புழுக்களைக் கொல்லவும், சர்க்கரை வியாதியை கட்டுப்படுத்தவும் உதவுகிறது.

துளசி இலை :
கடுமையான ஜலதோஷம், சுவாசம் விடுவதில் பிரச்சனை இருந்தால், தீர்த்து வைக்கிறது.

கடுகு இலை :
இதனுடைய சாறு, தொற்றினால் ஏற்படும் காது சம்பந்தமான பிரச்சனைகளுக்குச் சொட்டு மருந்தாகப் பயன்படுகிறது.

மாவிலை :
தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்துத் தேநீர் மாதிரிக் குடித்து வந்தால், night blindness என்ற கண்பார்வைக் குறைகள் நீங்கும்.

முருங்கை இலை :
சமைத்துச் சாப்பிட்டால் ஆஸ்துமா, உயர் இரத்த அழுத்தம் போன்றவை குணமாகும்.

பப்பாளி இலை :
பசை போல் அரைத்துத் தீப்புண்களின் மீது தடவலாம்.

கறிவேப்பிலை :
முடி உதிர்வதைக் கட்டுப்படுத்தும். நீரழிவு நோயைக் குணப்படுத்தும்.

புதினா இலை :
சிறு பூச்சிகள் கடித்து விட்டால், காயத்தைக் கழுவ, புதினா இலையைத் தண்ணீர் விட்டுக் கொதிக்க வைத்து அந்தத் தண்ணீரைப் பயன்படுத்தலாம்.

முந்திரி இலை :
தளிர் இலைகளை நன்றாகக் கடித்துத் தின்றால் பல் வலி போகும்.

ஆமணக்கு இலை :
தோலின் மீது ஏற்படும் புண்களையும் காயங்களையும் குணமாக்கும்.

யூகலிப்டஸ் இலை :
எக்ஸீமா என்ற படை நோய்க்கும், சொறி சிரங்குக்கும் நல்ல குணம் தருகிறது.

Collected from Internet

வர்களே பேசித் தீர்க்க வேண்டும் என்றால் பிரச்சனைகள் ஒருபோதும் தீராது. வடலூர் வள்ளல், தேட்டிலே மிகுந்த சென்னை என்று கூட்டத்தை விடுத்து தனிமை நாடி புறப்பட்டார் — ஞானம் பெற தனித்திரு என்றும் உபதேசித்தார். புத்தர், மகாவீரர், நபிகள், இத்தகைய ஞானிகள் ஞானம் பெற்றபோது தனிமையில்தான் பெற்றார்கள்.

சிலபேர் தனியாக இருக்கவே விரும்ப மாட்டார்கள்…எப்போதுமே கூட்டத்தோடு கூட்டமாகவே இருக்க விரும்புவார்கள். இது நல்லதல்ல… பலரோடு மட்டுமே இருந்தால் போதுமா? உங்களோடு மட்டுமே நீங்கள் இருக்க வேண்டாமா? உங்களுடன் கொஞ்ச நேரமாவது தனியாக இருங்கள். அவ்வப்போது தனிமையை நேசியுங்கள்… பத்து பேருக்கு மத்தியிலும் உங்கள் தனிமையைத் தக்க வைத்துக் கொள்ளும் தைரியத்துடன் இருங்கள். அதன் பின் உங்களுக்குள் எத்தனை மாற்றங்கள் நிகழும் தெரியுமா?

## நாம் வாழும் பூமி குறித்த உண்மைகள்

- நமது பூமியில் அதிகளவு இருப்பது இரும்பு, ஆக்ஸிஜன் மற்றும் சிலிகான் என்ற பொருட்களே இந்த பூமியை பொருட்கள் வகையினமாக நீங்கள் பிரிப்பீர்கள் என்றால், 32.1% இரும்பையும், 30.1% ஆக்ஸிஜனையும், 15.1% சிலிகானையும் மற்றும் 13.9% மக்னீஷியம் ஆகியவற்றைப் பெறுவீர்கள். இந்த இரும்பில் பெரும்பாலான பகுதியானது, பூமியின் ஆழத்தில், மையப்பகுதியில் கிடைக்கிறது.
- பூமியின் மேற்பரப்பில் 70% வரை தண்ணீர் நிரம்பியிருக்கிறது விண்வெளி வீரர்கள் முதன்முதலாக பூமிக்கு மேலே வெகு தூரத்தில் விண்வெளிக்குச் சென்று அங்கிருந்து பூமியை திரும்பி பார்த்தபோது, அவர்களது கண்களுக்கு பூமியில் நீல நிறமே அதிகமாக தெரிந்ததால், நமது பூமியை நீல கிரகம் என அழைத்தனர். இது ஒன்றும் வியப்பான செய்தியல்ல, ஏனெனில் நமது பூமியில் 70% கடல்களால் நிரம்பியிருக்கிறது . எஞ்சியுள்ள 30% மட்டுமே கனமான தரைப்பரப்பாக கடல் மட்டத்தைவிட உயரமாக இருக்கிறது.

Compiled By : Mr. K. Manivannan
Fib Tec

## நம்பித்தான் ஆகவேண்டும்

## 5S (தொடர்ச்சி XXVII)

### பூனை அவசியமா?

இந்தப் பிரச்சனை நம் ஒருவருக்குமட்டும் நேர்ந்தால்கூட பரவாயில்லை. அநேகமாக அலுவலகத்தில் இருக்கிற பெரும்பாலானோர், இப்படித்தான் 'மெடிக்கல் லீவ்' வசதி இருந்தும் கூட, அதைச் சரியாகப் பயன்படுத்திக் கொள்ளமுடியாமல் திணறுகிறார்கள்.

இது போன்ற சந்தர்ப்பங்களில்தான், 'செய்ரி' யின் உதவியை நாட வேண்டும். நமது விடுமுறை விண்ணப்ப வழிமுறையை, நாமே ஒரு கடுமையான விமர்சனப் பார்வையோடு ஆராயவேண்டும்.

- நீண்ட விடுமுறையில் செல்கிறவர்கள், மருத்துவச் சான்றிதழ் தருவது அவசியம், அதைத் தவிர்க்கமுடியாது. இல்லாவிட்டால், பொய்யான வியாதிகளைச் சொல்லி ஏமாற்றுகிறவர்கள் அதிகமாகிவிடுவார்கள்.
- எல்லோரும் தங்களுடைய மேலாளர் அல்லது உடனடி 'பாஸ்' என்று உட்கார்ந்திருக்கிறவர்களிடம் தான் விடுமுறைக்கு விண்ணப்பிக்க வேண்டும். இதுவும் சரியான வழிமுறை தான். அவருடைய

Contd…4

## கவிதைகள்

### Allow Yourself

Allow yourself to dream,
And when you do dream big
Allow yourself to learn
And when you do learn all you can
Allow yourself to laugh
And when you do share your laughter
Allow yourself to set goals
And when you do reward yourself as you move forward
Allow yourself to be determined
And when you do you will find you will succeed
Allow yourself to believe in yourself
And when you do you will find self - confidence
Allow yourself to lend a helping hand
And when you do a hand will help you.
Allow yourself relaxation
And when you do you will find new ideas.
Allow yourself to be happy
And when you do you will influence others around you.
Allow yourself to be positive
And when you do life will get easier.

Compiled By : Miss. T. Regi
Facilitation

### அழகு

ஆயிரம் கோடி நட்சத்திரம்
விண்ணில் இருந்தாலும்
இரவுக்கு அழகு நிலவுதான்...
ஆயிரம் உறவுகள்
மண்ணில் இருந்தாலும்
வாழ்கைக்கு அழகு
நல்ல நட்புதான்...

Compiled By : Mrs. M. Sudha
Fib Tec

## சிந்தனைக்கு

பலவீனத்திற்கான பரிகாரம், பலவீனத்தைக் குறித்து ஓயாது சிந்திப்பதல்ல. மாறாக வலிமையைக் குறித்துச் சிந்திப்பதுதான்.

Compiled By : Mrs. R. Jayanthi
Purchase

**பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள்,கதைகள் வரவேற்கப்படுகிறது**
**– Editor**

ஒப்புதலின்பேரில், இந்தக் கடிதம் தலைமை மேலாளருக்குச் செல்கிறது. அவர் அதை நிராகரிக்கலாம் அல்லது ஏற்கலாம். அலுவலக மேலதிகாரியின் ஒப்புதல் பெறுகிற இந்தப் படியும் அவசியம்தான்.

- ஆனால், ஒவ்வொரு விடுமுறை விண்ணப்பமும் எங்கோ டெல்லியில் இருக்கிற தலைமை அலுவலகத்துக்குச் சென்று திரும்புவது அவசியமா? உள்ளூர் ஊழியரின் உடல்நிலை பற்றி அவர்களுக்கு என்னத் தெரியும்? விடுமுறையை இங்கே கொடுத்துவிட்டு, தகவலை மட்டும் டெல்லிக்குத் தெரிவித்தால் போதாதா?

இதுபோல் வழிமுறைகளை பிரித்துப் போட்டு ஆராய்கிற போது, தேவையற்ற படிகள் (steps) இடைச்செருகல்கள் தவிர்க்கப்படுகின்றன. பொருள்களை ஒழுங்காக்கி வைப்பதில் இடம் மிச்சமாகிறது என்றால், வழிமுறைகளை ஒழுங்காக்குவதில் நேரம் மிச்சமாகிறது.

வழிமுறைகளை மேம்படுத்துவது போலவே, அலுவலகங்களில் உள்ள அதிகார மட்டங்களைத் தீர்மானிப்பதிலும் 'செய்ரி' பயன்படுத்தப்படுகிறது.

பெரும்பாலான அலுவலகங்களில் துணை மேனேஜர், இணை மேனேஜர், மேனேஜர், ஜெனரல் மேனேஜர், சூப்பர் மேனேஜர் என்று புதுசுபுதுசாகப் பதவிகளை உருவாக்கிக்கொண்டே இருப்பதால், ஒருகட்டத்தில் யார் யாருக்கு மேலதிகாரி, யார் சொல்வதை யார் கேட்கவேண்டும், எந்த ஃபைல் யாரிடம் போகவேண்டும் என்பதுபோன்ற அத்தியாவசியமான விஷயங்களே யாருக்கும் தெரியாத மர்மங்களாகிவிடுகின்றன.

இதனால், ஒவ்வொரு பதவியையும் எடுத்துக்கொண்டு, அதில் உள்ளவருடைய தினசரிப் பணிகள், கடமைகள், நிறுவனத்தின் எதிர்பார்ப்புகள் போன்றவற்றை ஆய்வு செய்து, இந்தப் பதவி நிஜமாகவே அவசியமா என்று ஆராயச் சொல்கிறது 'செய்ரி'.

இதன்மூலம், குழப்பமில்லாத, தெளிவான நிர்வாகக் கட்டமைப்பு சாத்தியப்படுகிறது. அடிமட்டத்தில் தொடங்கி, உயர்மட்டம்வரை எல்லா வேலைகளும் விரைவாக முடிகின்றன.

5s ' வரிசையின் முதல் சூத்திரமான 'செய்ரி 'யின் அடிப்படை நோக்கமே, பணியிடத்தை ஒழுங்குபடுத்துவதுதான்! எனினும், இதுபோன்ற பல்வேறு மேலாண்மைப் பிரச்சனைகளைத் தீர்ப்பதிலும், அதன் எளிமையான தத்துவங்கள், வழிமுறைகள் பரவலாகப் பயன்படுத்தப்படுகின்றன.

தொடரும்...

### FACTORY MOLDED COMPOSITE STS SYSTEM

